# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 | தொலைபேசி: 23411 | நிறுவியது 1947

வள்ளுவர் ஆண்டு 2008 | ஐ. அவ். 17 — வைகாசி 9 (5-6-77) ஞாயிறு | புத்தகம் 31 | இதழ் 2


# ‘தொண்டமானை நாட்டைவிட்டு துரத்துவோம்!’

## அமைச்சர் கொப்பேகடுவ ஆவேசம்!

‘தொண்டமான் அதிகம் சேட்டை விடுகிருர்; அவர் தனது சேட்டையை நிறுத்தாவிட்டால், அவரை நாட்டைவிட்டுத் துரத்துவோம்!’

இவ்வாறு யட்டிநுவரையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டமொன்றில் பேசிய வேளாண்மை காணி அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ இனவெறிபிடித்து அலறியிருக்கிருர். அவரது உரையை 28-5-77 ‘சன்’ பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.


“தொண்டமான் தன்னுடைய கடைசி காலத்தில் அதிகம் சேட்டைவிடப்பார்க்கிருர். அவரது தோட்ட சாம்ராச்சியத்தை அரசாங்கம் அழித்தபோது அவர் அமைதியாக இருந்தார். இப்போது ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்து சேட்டை விடப்பார்க்கிருர். அவர் தனது இத்தகைய சேட்டைகளை நிறுத்தாவிட்டால், அவருக்கென விடப்பட்டிருக்கும் 52 ஏக்கர் நிலத்தையும் பறித்துக்கொண்டு, அவரை நாட்டைவிட்டே விரட்டியடிப்போம்; நாடு கடத்தி விடுவோம்!”

—இவ்வாறு திரு. ஹெக்டர் கொப்பேகடுவ கூறியுள்ளார்.

### யோகேஸ் — ஒரு நல்ல ‘கேஸ்’!

தமிழ் மக்களே! உங்கள் முன்நிற்கும் வேட்பாளர்களை நிறுத்துப்பார்த்து தீர்ப்பளிக்கும் மகத்தான பொறுப்பு உங்களுடையது பலதரப்பட்ட ‘கேஸ்கள்’ நம்மிடை உண்டு. கேட்டின் மார்ட்டின் ஒரு கேஸ்; தாலியைக்காட்டி வாக்குக் கேட்ட அம்பலம் ஒரு கேஸ்; பனியர் மற்ருெரு கேஸ்; யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் யோகேஸ் ஒரு நல்ல ‘கேஸ்’. யாழ்ப்பாண வாக்காளர்களே, யோகேஸ்வரன் ஒரு நல்ல ‘கேஸ்’. அவரை நாடாளுமன்றம் அனுப்பி வையுங்கள்!

—யாழ்முற்றவெளிக் கூட்டத்தில் காசிஆனந்தன்.



## இன்று சிவகுமாரன் நினைவு நாள்!

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் களப்பலியாக தன் உயிரையே தியாகம்செய்த மானமறவன்— வீரத்தமிழ் மகன் — சிவகுமாரனுடைய மூன்ருவது ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை (5-6-77) சிவகுமாரனின் பிறந்த ஊராகிய உரும்பராயிலும் மீன்பாடும் தேனுடாகிய மட்டுநகரிலும் நடைபெறுகின்றன.

உரும்பராயில் சிவகுமாரன் சமாதிக்கு வீரவழிபாடு இடம்பெறுகிறது. தொடர்ந்து மௌன ஊர்வலம் இடம்பெறும். மௌன ஊர்வலத்தில் தமிழ் இளைஞர் பேரவையினர், மகளிர் பேரவையினர் கலந்துகொள்வார்கள். சிவகுமாரனின் சிலைக்கு முன்னல் நடைபெறும் அஞ்சலிக்கூட்டத்துக்கு சிறைமீண்ட இளைஞர் பொன். சத்தியசீலன் தலைமை தாங்குகிருர்கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம் மு. சிவசிதம்பரம், சி. கதிரவேற்பிள்ளை, மாவை சேனதிராசா, திருமதி மங்கை அமிர்தலிங்கம் ஆகியோர் உரையாற்றுகிருர்கள்.

### மட்டுநகரில்

தமிழ்த் தியாகி சிவகுமாரன் நினைவு தினத்தினை மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையினர் இன்று எழுச்சி விழாவாகக்கொண்டாட இருக்கின்றனர். மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்திற்கு அண்மையிலுள்ள பயனியர் வீதியில் அமைந்துள்ள தந்தை செல்வா அரங்கில் இந் நினைவுதினம் கொண்டாடப்பட இருக்கின்றது. மாலை 5 மணியளவில் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. பொன் வேணுதாஸ் தலைமையில் இடம்பெறவிருக்கும் இவ்விழாவில் சிறப்

—5-ம் பக்கம் பார்க்க

# நியமனப் பத்திரங்கள் திங்களன்று தாக்கல்!

## தமிழ் ஈழமெங்கும் ‘கூட்டணி அலை!’

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் எதிர்வரும் திங்களன்று (6-6-77) அவ்வப்பகுதி அரசாங்க செயலகங்களில் தாக்கல் செய்யப்படுகின்றன. அன்றைய தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தமிழ்ஈழத்தில் போட்டியிடும் 25 வேட்பாளர்களும் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வார்கள். கொழும்பு செயலகத்திலும் நுவரெலியா செயலகத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்கள் இருவரும் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வார்கள்.

பருத்தித்துறை, உடுப்பிட்டி, கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, மானிப்பாய், காங்கேசன்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளின் வேடபு மனுக்கள் யாழ் அரசாங்க செயலகத்திலும், முல்லைத்தீவு. வவுனியா ஆகிய தொகுதிகளின் வேட்பு மனுக்கள் வவுனியா அரசாங்க செயலகத்திலும், மன்னுர் தொகுதி வேட்பு மனு மன்னுர் செயலகத்திலும், மடடக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளின் வேட்பு மனுக்கள் மட்டச்களப்பு செயலகத்திலும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய தொகுதிகளின் வேட்பு மனுக்கள் அம்பாறை செயலகத்திலும், திருகோணமலை, மூதூர், சேருவில தொகுதிகளின் வேடபு மனுக்கள் திருகோணமலை செயலகத்திலும புத்தளம் வேட்பாளர் புத்தளம் செயலகத்திலும் தாக்கல் செய்யப்பட விருக்கின்றன.

நியமன திகதியிலிருந்து, வாக்களிப்பு முடியும்வரை, பொது இடங்களில் கட்சிக் கொடிகள், கட்சிச் சின்னங்கள், தேர்தல் சின்னங்கள், தேர்தல் பிரசுரங்கள் ஒட்டுவது சட்டவிரோதமாகும். வேட்பாளரின் கார், கட்சி அலுவலகம், கூட்டம் நடைபெறும் இடங்கள் ஆகிய

—5-ம் பக்கம் பார்க்க

## கூட்டணி வேட்பாளர்களின் 4 வாக்குறுதிகள்

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் 25 வேட்பாளர்களும் தனித்தனியே கையெழுத்திட்டு பின்வரும் உறுதிமொழிகளை கூட்டணித் தலைமைப்பீடத்திடம் அளித்துள்ளனர்.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் நான், கீழ்க்காணும் வாக்குறுதிகளை உண்மையாகவும் மன விசுவாசத்துடனும், அளிக்கின்றேன்:

- சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற சமதர்ம தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்கு மனம் வாக்கு காயம் ஆகியவற்ருல் விசுவாசமாக உழைப்பேன்.
- தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவும், நடவடிக்கைக்குழுவும், பொதுச்சபையும் காலத்துக்குக் காலம் எடுக்கும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன்.
- அப்படியான முடிவுகள் எதற்கும் கட்டுப்பட்டு நடக்க என் மனச்சாட்சிப் படி முடியாத நிலை ஏற்படுமிடத்து எனது தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பதவியைவிட்டு விலகுவேன்.
- இயக்கத்திற்காக முழுநேர ஊழியனுக உழைப்பேன் என்றும், அல்லது நடவடிக்கைக்குழு தீர்மானிக்கும் பிரகாரம், என் உழைப்பில் குறிப்பிட்ட வீதத்தை இயக்கத்திற்கு கொடுப்பேன் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

### தபால்மூலம் வாக்களிப்பு
### கடைசி நாள் யூன் 16

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தபால்மூலம் வாக்களிக்கக்கூடிய கடைசி நாள் யூன் 16 ஆகும். அதற்குமுன்னர் தபால் மூலம் வாக்களிப்போர் தங்கள் வாக்குகளை அனுப்பிவிடவேண்டும்.

தமிழ் ஈழத்தேசியத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராஜசூரியர்,
கொழும்பு-10.

கே: திரு.ஆ. தியாகராசா சிறீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தும் தாம் வெளியேறுவதாக கடைசி நிமிடத்தில் கூறுவதற்குகாரணம் என்ன?

ப: சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டால் கட்டுப்பணம்கூடக் கிடைக்காது என்பது அவருக்குத் தெரியும். எனவே மக்களை ஏமாற்றி கட்டுப்பணத்தை யாவது காப்பாற்றவே இந்தக் கடைசி நேர நாடகம்! இது வட்டுக்கோட்டைத் தொகுதி வாக்காளர்களுக்குத் தெரியும்! ஆரம்பத்தில் 'தனிநாடு' கோரிய தியாகராசா, 1970 பொதுத்தேர்தலில் தமிழ் காங்கிரஸ்காரராகப் போட்டியிட்டபோது ஆட்சிக்கு யூ. என். பி. வரும் என்ற எண்ணத்தில் யூ. என் பிக்காக வக்காலத்து வாங்கினார். யூஎன்பி தோல்வியுற்று, சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிபீடமேறியவுடன் தமிழ் காங்கிரசுக்கு துரோகம் செய்து ஆளுங்கட்சிக்கு தாவி, சோசலிச 'ஜெபம்' செய்தார். என்னதான் ஜெபம் செய்தும் ஒரு அரை அமைச்சர் பதவிகூட அவருக்குக் கிடைக்கவில்லை; புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததன் மூலம் தமிழ் சமுதாயத்தின் நெஞ்சில் ஆழமாகக் குத்தினார். அதனால் ஏற்பட்ட காயத்திலிருந்து இன்னும் தமிழ் சமுதாயத்துக்கு இரத்தம் கசிந்தபடியேயிருக்கிறது. இந்தப் படுதுரோகத்துக்கு தியாகராசா மக்களிடமிருந்து இத்தேர்தலில் தகுந்த பாடம் படிப்பார்!

ஃ

எஸ். முருகேசு,
யாழ்ப்பாணம்.

கே: உடுப்பிட்டித்தொகுதியில் போட்டியிடும் இராசலிங்கம் அவர்களைப் பற்றி கூறுவீர்களா?

ப: பழகுதற்கு இனியவர்; தலைசிறந்த கல்விமான்; ஒழுக்கசீலர்; பண்பாளர், பட்டங்கள் பல பெற்றவர்; தந்தை செல்வா அவர்கள் மீது ஆழமான பக்திகொண்டவர். எல்லோர்க்கும் நல்லவர்; எல்லோராலும் மதிக்கப்படுபவர். உடுப்பிட்டித் தொகுதியில் அவர் ஈட்டப்போகும் வெற்றி உலக அரங்கில் தமிழினத்தை தலைநிமிர வைக்குப்!

கே: உடுப்பிட்டித்தொகுதியில் திரு.இராசலிங்கத்தை எதிர்த்துப் போட்டியிடுபவர்களை, எப்படி அழைக்கலாம் குயுக்தியாரே?

ப: தமிழ் சமுதாயத்தின் துரோகிகள் அவர்கள்! தமிழ் சமுதாயம் ஏற்றத் தாழ்வின்றி சகோதரர்களாக ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் சமதர்ம இலட்சியத்துக்கு ஊறு விளைவிக்கும் சமூக விரோதிகள் அவர்கள்! தமிழ் சமுதாயத்தை ஏனைய உலக மக்கள் அவமதிப்பதற்கு காரணமாக இருப்பவர்கள் அவர்கள். தெற்கு ரொடீசியாவிலும் தென் ஆபிரிக்காவிலும் வாழும் நிறவெறி பிடித்த வெள்ளைக்காரர்களின் சகோதரர்கள் அவர்கள்!

ஃ

முருகையா,
திருகோணமலை,

கே: தினசதியார் தமிழினத்தின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் செய்திகளை பெரிதுபடுத்தும் காரணம் என்ன?

ப: தினசதியார் தமிழின விரோதியென்பதுதான் உலகம் அறிந்த உண்மையாயிற்றே! உலகெங்கும் தமிழ் சமுதாயம் முழுவதுமே இன்று தலைவணங்கும் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களையே அவமதித்து—தந்தை செல்வாவை சூரபத்மன் என்னும் அசுரனாகவும், சாதிமத வெறியையே அடிப்படையாக வைத்து 1970 பொதுத்தேர்தலில் தந்தை செல்வாவை எதிர்த்துப் போட்டியிட்ட சுந்தரலிங்கத்தை சுப்பிரமணியராகவும் உருவகம் செய்து கார்டூன் போட்டவர் இந்த தினசதியார் என்பதைஅதற்குள் மறந்துவிட்டீர்களா? தமிழினத்தின் விரோதிகளையே எப்போதும் தினசதி ஆதரித்து நிற்கும். தினசதியாரை ஆதரிக்கிறதோ அவர்கள் தமிழினத்தின் விரோதிகள் என்று எண்ணிக்கொள்ளுங்கள்! தினசதியாரின் நண்பர்கள் — தமிழினத்தின் விரோதிகள்!

ஃ

செல்வதாசன்
சாவகச்சேரி

கே: காங்கிரசை தமிழரசுக்கு அடைவுவைத்துவிட்டார்கள் என்று ஒப்பாரி வைக்கிறாரே வி. குமாரசாமி?

ப: 1970 பொதுத்தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வியடைந்த குமாரசாமி, ஏழு வருடங்களாக இருந்த இடம்கூடத் தெரியவில்லை. இப்போது மறுபடியும் தேர்தல் என்றதும் ஏதோ ஒன்றைக் கூறிக்கொண்டு,முகங்காட்டுகிறார்! 'தினசதி'யார் குமாரசாமிக்கு கொடுக்குக்கட்டி விடுகிறார்! 1954ம் ஆண்டு மந்திரிசபையிலிருந்து தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை சேர் ஜோன் கொத்தலாவலை வெளியேற்றிய பின்னரும், மந்திரிசபையில் ஒட்டிக்கொண்டிருந்தவர் இந்தக் குமாரசாமி. ஒட்டிக்கொண்டிருந்தது மாத்திரமல்ல தனது தலைவராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலத்தையே 'வாலறுந்த நரி' யென்று நாக்கூசாது கேலி செய்தவர் இதே குமாரசாமி. இப்படிப்பட்டவருக்கு தமிழ் காங்கிரஸ் கட்சி பற்றியும் அமரர் பொன்னம்பலத்தை பற்றியும் பேசுவதற்கு என்ன தகுதியிருக்கிறது? ஜீ.ஜீ.யை 'வாலறுந்த நரி' யென்று இகழ்ந்த குமாரசாமிக்கு முந்திய தேர்தல்களில் மீண்டும் நியமனம் கொடுத்தது தமிழ் காங்கிரஸ் தலைமைப் பீடம் விட்ட தவறு!

ஃ

சுப்பிரமணியம்
கொழும்பு-3

கே: வடக்கு கிழக்கில் தனித்தமிழ் நாடு அமைந்தால் அது ஒரு ஏகாதிபத்திய நாட்டின் தளமாக அமையும் என்கிறாரே பாலாதம்பு?

ப: இன்று தமிழ் ஈழம் சிங்கள ஏகாதிபத்தியத்தின் தளமாக இருப்பது பாலாதம்புவின் கண்களுக்குத் தெரியவில்லையே! சுதந்திரத் தமிழ் ஈழம் எந்த ஒரு ஏகாதிபத்தியத்துடனும் சேராது கூட்டுச் சேரா நாடாகவே விளங்கும் என்று கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுவதும் பாலாதம்புவுக்குத்தெரியவில்லைப்போலும்!

ஃ

சி. முருகையா
கொழும்பு-13

கே: தனித்தமிழ் நாடு அமைப்பதே தனது கொள்கையென்று கூறிக்கொள்ளும் சுயாட்சிக் கழகம்,அதே கொள்கையைக் கொண்ட, தமிழினத்தின் மாபெரும் இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துப்போட்டியிட முயலுவதேன்?

ப: எல்லாம் பி. பதவி ஆசைதான்! சுயாட்சிக்கழகம் கூட்டணியிடம் இரண்டு தொகுதிகேட்டிருந்தது. அதைக்கொடுத்திருந்தால் சுயாட்சிக் கழகத்தினர் கூட்டணி மேடையில் கூட்டணியை ஆதரித்து வானளாவ முழங்கியிருப்பார்கள்! தொகுதிகொடுப்பதற்கு கூட்டணி முன்வராததால், கூட்டணிக்கு எதிராகபோட்டியிடுவதன் மூலம் தமிழின விரோதிகளின் கைகளைப் பலப்படுத்தப் போகிறார்கள்! சென்ற 1970 தேர்தலில் நல்லூரில் அருளம்பலம் வெற்றிக்கு வழிவகுத்துக் கொடுத்தவர்கள் இதே சுயாட்சிக் கழகத்தினரே! சுயாட்சிக் கழகம் அங்கு போட்டியிடாமல் இருந்திருந்தால் நல்லூரில்சென்ற தேர்தலில் நாகநாதன் வெற்றிபெற்றிருப்பார்!

ஃ

இராமநாதன்
பருத்தித்துறை

கே: புதிய அரசியல் சாசனத்துக்கு விசுவாசம் தெரிவிக்க மறுத்து தனது அரசாங்க உத்தியோகத்தையே உதறியெறிந்த உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன், தேர்தலில் வெற்றிபெற்று தேசிய அரசுப் பேரவைக்கு சென்றால் அதே அரசியல் சட்டத்துக்கு விசுவாசப் பிரமாணம் செய்யவேண்டி வருமே—அப்படிச் செய்யலாமா?

ப: கவிஞர் காசிஆனந்தன் 1972ம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் தமிழினத்தின் மீது பலவந்தமாக திணிக்கப்பட்ட நேரத்தில் அதற்கு எதிரான தமிழ் இனத்தின் வெறுப்பை எடுத்துக்காட்ட தனது உத்தியோகத்தையே உதறியெறிந்தார். இதனால் தமிழ் இளைஞர்களிடையே அந்நேரத்தில் புதிய வேகம் பிறந்தது. இப்போது கவிஞர் தேசிய அரசப்பேரவைக்கு செல்வதும் புதிய அடிமை அரசியல் சட்டத்தை எதிர்த்து அங்கு உக்கிரமாக போராடுவதற்கே! தந்தை செல்வா புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக தனது பா.உ. பதவியையே ராஜினுமா செய்து, அதே பிரச்சினையை முன்வைத்து இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னர்,பேரவைக்குச்சென்றதும் மீண்டும் சம்பிரதாயத்துக்காக அதே அரசியல் சட்டத்தின்மீது விசுவாசப் பிரமாணம் செய்தது போலவே—தந்தையின் வழியில் தனயனும் செல்வார்! இதில் தவறு ஏதும் இல்லை!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
194 ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.




பாவியுங்கள்
அன்றும்
இன்றும்
என்றும்

மக்கள் மத்தியில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நீலம்
றேயல் நீலம்
எமது மற்றும் பிரபல தயாரிப்புகள்
றேயல் ஜெலிகிறிஸ்டல்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் பேக்கிங் பவுடர்
றேயல் கோன் பிளவர்
தயாரித்து விற்பனை செய்பவர்கள்
சிவா இண்டஸ்ரிஸ்
112 - 1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11

## சிவசிதம்பரத்துக்கு பண்டிதமணி வாழ்த்து!



நல்லூர் தொகுதியில் தமது தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும், நல்லூர் தொகுதி கூட்டணி வேட்பாளருமான சட்டத்தரணி திரு. சிவசிதம்பரம் அவர்கள், திருநெல்வேலிக்குச்சென்று தமிழ் முனிவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைக்கண்டு வாழ்த்துப்பெற்ருர். அப்போது பண்டிதமணி வழங்கிய ஆசியுரை வருமாறு:-

திருவருளைச் சிந்தித்து வணங்குவோமாக.

நீதி மந்திர சக்தியினும் பல மடங்கு சக்தி வாய்ந்தது.

தெய்வத்துக்குப் புனிதமான தொருறைவிடம் என்ருல் அது நீதியேயாம்.

ஒவ்வொரு சிந்தனையிலும், ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு சொல்லிலும் நீதி திறம்பாது ஒழுக வழிப்படுத்தி அருள்க என்று வேண்டுதல் செய்து தெய்வத்தைப் பிரார்த்திப்போமாக.

இந்தப் பிரார்த்தனையே நாம் செயற்பாலதாகிய செய் தவம்.

அன்பர் அவர்களே,

தெய்வ பக்தி, தங்கள் குடும்பத்து பரம்பரைச் செல்வம். இதற்கு மேலே, சாந்தம் — சமாதான விருப்பு — என்பவை தங்களுக்குப் பிறவிச்சொத்து.

இந்த இருவகைப்பேறும், தங்கள் பால் மென் மேலும் விருத்தியுற்று, எடுத்த கருமங்களிலெல்லாம் நீதியாய பெருவெற்றி தந்து,

இந்த நாட்டுக்கேயன்றி, உலகுக்கே எடுத்துக் காட்டாய் உயிர்களுக்கு உறுதி பயப்பதாக என்று—

மேலும் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

—பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
கலாசாலை வீதி
திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி சிவகுமாரன் மீது ஆணை!

அன்பு நண்பா,

ஈழத்தமிழினம் நடத்தி வருகின்ற விடுதலைப் போராட்டத்தில் — இயக்க வரலாற்றில் —என்றைக்கும் இதயத்திலே பதிந்து எழுச்சியும் உணர்ச்சியும் ஆவேசமும் தந்துகொண்டிருக்கிற நாள் 'யூன் 5' ஆகும். கண்ணீரும், செந்நீரும் சிந்திடவும், இனிய சுதந்திரத்துக்காக எதையும் தாங்கிடவும், இன்னுயிரைத் தந்திடவும் நமது மக்கள் தயாராகி விட்டனர் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிற ஒப்பற்ற தியாகத் திருநாள் —புரட்சித் திருநாள்—யூன் ஐந்து ஆகும்!

தமிழீழத்தின் சுதந்திரத்தை மீட்டிட— தாயகத்தின் அடிமைத்தளையை அறுத்திட— தன்மானத்தை காத்திட — அறவழியிலே அஹிம்சைப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கின்ற தமிழ் சமுதாயம், அடக்குமுறை அதிகரிக்குமானால் ஆயுதமேந்திடவும், தயங்காது என்பதை அகிலத்துக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கும் ஒருநாள் யூன் 5 ஆகும்!

ஆம் நண்பா — தமிழினத்தின் தனிப் பெரும் மொழியைத் தாழ்த்தி — தமிழன்னையை அரியணையிலிருந்து தூக்கியெறிந்து— அந்த இடத்திலே சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமான சிங்களத்தை மட்டுமே அமர்த்தி —தமிழ் சமுதாயத்தை அடிமை நிலைக்குத் தள்ளிய அக்கிரமச் சட்டத்தை — சிங்களம் மட்டும் என்ற அமங்கலச் சட்டத்தை — எதிர்த்து, தமிழ் மக்கள் தந்தை செல்வாவின் தலைமையிலே முதன் முதலாக நேரடிப் போராட்டத்தை—அஹிம்சை வழியிலே ஆரம்பித்த புரட்சிநாள் 1956 யூன் ஐந்துதான் என்பதை நீ அறிவாயே! அன்றையதினம், கொழும்பு காலிமுகத்திடலில் மூதறிஞர் தலைமையில் கொட்டும் மழையில் நடைபெற்ற அந்த சத்தியாக்கிரகத்தின்போது, சிங்கள ஏகாதிபத்தியத்தின் குண்டர்கள் செய்துவிட்ட கொடுமைகள்தாம் எத்தனை?

அமரர் வன்னியசிங்கம் அவர்கள் உருட்டி உருட்டி உதைக்கப்பட்டார்; அவரது மூக்குக் கண்ணாடி நொறுக்கப் பட்டு, மேலங்கி கிழித்தெறியப்பட்டது; தளபதி அமிர்தலிங்கத்தின் நெற்றி சிங்களவெறியன் ஒருவன் வீசிய கல்லினால் தாக்குண்டு, அதிலிருந்து குபுகுபுவென்று பச்சை இரத்தம் பெருகியது; நம்முடைய கடமை வீரர் வி. என். நவரத்தினம் அவர்களின் அடிவயிற்றில் மூங்கில் கழியினால் குத்தினான் மற்றோர் சிங்களக்காடையன்; தாமரைக்குளம் செல்லையா என்ற இயக்கத்தொண்டரின் காதைக் கடித்தெடுத்து, தாம் மிருகவெறி பிடித்த சாதியினரே என்பதை உறுதிப்படுத்தினான் மற்றோர் சிங்களவெறியன். அப்பையா என்றதொண்டருக்கு, அவர் அணிந்திருந்த பனையோலைத் தொப்பியைக் கழற்றி அதிலே தனது சிறு நீரைப்பெய்து, அச்சிறு நீரைப்பருக்கினான் வேறோர் இனவெறியன்; தந்தை செல்வாவின் புதல்வர்கள் இருவர் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள்!

இத்தனை இன்னல்களையும், துன்பங்களையும் தாங்கியபடி—சிங்களம் மட்டும் என்ற ஏகாதிபத்திய — பாஸிஸ சட்டத்தை எதிர்த்து 1956ம் ஆண்டு யூன் ஐந்தாம் திகதி காலிமுகத்திடலில் நடைபெற்ற அறப்போராட்டம்தான் —நமது இயக்கத்தின் முதல் போராட்டமாகும்! அன்று காலிமுகத்திடலில் நம் தலைவர்கள் கொட்டிய தியாக இரத்தம்தான்— எழுதிய தியாக வரலாறுதான் நம் நீண்ட விடுதலைப்போராட்டத்தின் அடித்தளமாகும்! இன்றைய எழுச்சிக்கெல்லாம் அடிப்படையாக— அடிநாதமாக விளங்குவது அன்று சிங்கள நாட்டுத் தலைநகரில் சிந்தப்பட்ட செந்தமிழ்க் குருதியே!

இந்த முதற்போராட்டம் நடைபெற்று 18 ஆண்டுகள் கழித்து வந்த யூன் 5 — ஆம், 1974 யூன் 5 — ஈழத்தமிழனின் இதயத்தில் என்றைக்குமே வேதனையையும் அதே சமயம் வீரத்தையும் ஊட்டிக்கொண்டிருக்கிற ஒரு நாளாக அமைந்துவிட்டது!

விடுதலை வீறுகொண்டெழுந்து விட்ட தமிழ் ஈழத்தின் இளஞ் சிங்கங்கள், சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறையின் கொடுமையை எதிர்த்து அவசியமானால் ஆயுதம் ஏந்திப்போராடவும், அந்தப் புனிதப் போராட்டத்திலே தம் இன்னுயிரையே காணிக்கை தரவும் தயாராக இருக்கிறார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டிய நாள் தான் 1974 யூன் ஐந்து!

ஏறுபோல் நடையுடையான் — இளைய வீரன்— தாவிவரும் வேங்கைபோல்வான் — சமர்க்கு அஞ்சான்—மாதுளை போல் சிரித்திடுவான் — மாசு இல்லான்—மானமொன்றே உயிர் மூச்சாய்கொண்டிருந்தோன்—நாளைய நம்தலைமுறையின் தலைவனானோன் —நலிவுற்ற தமிழினத்தை வாழ வைக்க, வாளெடுத்துப் போர் புரிந்த வீரக்காளை—நம் நெஞ்சம் நிறைந்த அருமைத்தம்பி சிவகுமாரன் தமிழ் ஈழ விடுதலைக் களத்தில் தன் இன்னுயிர் பலி தந்து எழுச்சியை யூட்டிய நாள் இந்நாள் அன்றோ?

வாழ்வின் வசந்தகாலமாகிய இளமைப் பருவத்தில் — பட்டாம்பூச்சியாகப் பறந்து திரிந்து வாழ்வின் இனிமையனைத்தும் சுவைத்திட இயல்பாகவே எவருக்கும் ஆசை ஏற்படுகின்ற வயதில்—அவையாவற்றையும் தியாகம் செய்து — முற்றும் துறந்த முனிவர் போலாகி — தமிழ், தமிழினம், சுதந்திரத் தமிழ்ஈழம் என்கிற இலட்சிய வெறிபிடித்து, அதற்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்திட்ட பரிசுத்தமான வீரன் — நமது தம்பி சிவகுமாரன் என்பதை எவரும் மறுத்திடமுடியாது!

தங்கத் தமிழ்ஈழம் தனது சுதந்திரப் பயிரை வளர்க்க வேண்டுமானால்—சுதந்திரப் பயிருக்கு மத்தியிலே வளர்கின்ற களைகள் அனைத்தும் பிடுங்கப்பட்டேயாகவேண்டுமென்பது தம்பி சிவகுமாரனின் முடிந்த முடிபாகும்! அப்படிப்பட்ட களைகள் சிலவற்றை பிடுங்க முற்பட்டான் என்று கூறி சிங்கள ஏகாதிபத்தியம் விசாரணையின்றி சிவகுமாரனை சிறைக்குள் தள்ளி சித்திரவதைப்படுத்திய

அரசியல் மடல்

போதெல்லாம், சிரித்த முகத்துடன் அவற்றைத் தாங்கிக்கொண்டான் அந்த வீரத் திருமகன்!

நாம், ஜனநாயகக் களத்தில், தமிழ் மக்களின் வாக்குரிமையென்னும் அணுகுண்டுகளை பயன்படுத்தி யூலை 21 பொதுத்தேர்தலின்போது தமிழீழ விடுதலை விரோதிகளை தமிழ்ஈழத்தின் அரசியலிலிருந்து வேரோடு முற்றாகப் பிடுங்கியெறிகின்ற புனிதப் போராட்டத்திலே இப்போது ஈடுபட்டிருக்கிறோம்! சிவகுமாரனின் ஆவியும் இதே பணியில் இப்போது நிச்சயமாக ஈடுபட்டிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை!

சிவகுமாரன் காட்டிய வீரப்பாதை—தியாகப்பாதை—தமிழ் இளஞ்சிங்கங்களின் நெஞ்சங்களிலே ஏற்படுத்தி விட்ட வேகமும், ஆர்வமும், துடிப்பும் அளவிடற்கரியது. சிவகுமாரனையே இன்றைய இளைய சமுதாயம்—மாணவ சமுதாயம்—தங்கள் ஆதர்ஸ வீரனாக ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதிலே ஐயமில்லை!

1974ம் ஆண்டு சனவரி 10ம் நாள் — உலகத்தமிழ் மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியின் போது, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'ஜாலியன் வாலாபாக்' படுகொலை—அப்போது தமிழ் மங்கையர் இழந்த மானம்—இவை சிவகுமாரனின் உள்ளத்தில் கொந்தளிப்பையும் ஆவேசத்தையும் ஏற்படுத்திட, இந்த அக்கிரமத்தை எதிர்த்து இரண்டில் ஒன்று காண்பது என்ற முடிவுடன் அவன் களத்திலிறங்கி— இறுதியிலே தன் உயிர் தந்து நம் நெஞ்சில் நிலையானான்! தான் பிறந்த மண்ணிலே சிலையானான்!

அஞ்சியும் கெஞ்சியும், தமிழன் அடிமை வாழ்வு வாழக்கூடாது; பொங்கியெழுந்து போராடி தனது புனித தாயகத்தை மீட்டிட வேண்டும்; அதை ஒரு சமதர்ம பூமியாக, சாதிகளற்ற, தீண்டாமை, மதபேதமற்ற சோசலிச நாடாக உருவாக்கிட வேண்டும்; இந்த இலட்சியங்களுக்காக தமிழினம் ஒரே அணியிலே— உதயசூரியன் கொடியின்கீழ் திரளவேண்டும் என்பதே சிவகுமாரனின் இலட்சியமாகும்! இதற்காகவே அவன் தன்னை அர்ப்பணித்தான் —தன் தலைக்கு சிங்கள ஏகாதிபத்தியம் விலை பேசியபோதும் மாற்றார் தாள்பணிய மறுத்து தன்மானம் காத்து நின்றான்!

வீரன் சிவகுமாரன் சிங்கள ஏகாதிபத்திய வெறியர்களின் கைகளில் தான் உயிருடன் பிடிபடுவது தமிழ்மானத்துக்கு இழுக்கு என்று கருதினான் — அதனால் தனக்குத்தானே நஞ்சுண்டு உயிர் நீத்தான் — சிவகுமாரனின் பிணத்தையே கைது செய்யமுடிந்தது சிங்கள அரசாங்கத்தினால்! இது அவனது உறுதிக்கும் தன்மானத்துக்கும் எடுத்துக் காட்டன்றோ?

**இன்றைக்கு இந்த மானவீரன் சிவகுமாரனை 'கோழை' யென்றவர்களும், 'கொள்ளைக்காரன்' என்று வர்ணித்தவர்களும் தமிழ் மக்கள் மத்தியிலே வாக்குக் கேட்டு வடக்கிலும், கிழக்கிலும், தேர்தலிலே நிற்கிறார்கள்! இவர்களை இனங்கண்டு அரசியலிலிருந்து தூக்கியெறிந்திடுவது தமிழ் சமுதாயத்தின் கடமையாகும்!**

உதயசூரியன் கொடியொன்றே தமிழ் ஈழத்தின் சுதந்திரக் கொடியென்பதை ஏற்றுக்கொண்டு அதை வணங்கியவன் சிவகுமாரன்; அக்கொடியின் கீழ் தமிழ் சமுதாயம் சாதிமத பேதமின்றி ஒன்றிணைந்து சுதந்திரத்தமிழ் ஈழத்தை சமைத்திட போர்தொடுத்திடவேண்டுமென்று கனவு கண்டவன்சிவகுமாரன்; அவனது கனவை நனவாக்கக் கூடிய அருமையான சந்தர்ப்பம் யூலை 21ம் நாள் தமிழ் சமுதாயத்துக்கு கிடைக்கவிருக்கிறது.

ஆம், தமிழ் இனத்தின் விரோதிகளை— தமிழ் இனத்தின் துரோகிகளை — தமிழின ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்போரை— இனத்தைக் காட்டிகொடுத்த எட்டப்பர்களை — இனங்கண்டு வாக்குச் சீட்டினால் விரட்டியடித்து, அரசியலிலிருந்து வேரோடு கெல்லியெறியக் கூடிய அருமையான சந்தர்ப்பம் — சுதந்திரப் பயிர் வளர்ந்திட களையெடுக்கவேண்டும் என்கிற சிவகுமாரத் தம்பியின் எண்ணத்தை ஜனநாயக வழி நின்று செயலாக்கும் அருமையான வாய்ப்பு—தமிழ் மக்களின் கரங்களிலே யூலை 21ம் நாள் தானாக வலிய வருகிறது.

பூக்கவிருக்கின்ற புதிய தமிழ்ஈழத்தில் மத வேறுபாடு இருக்காது; சாதி வேறுபாடு குறுக்கிடாது; தீண்டாமைக் கொடுமைகள் அடியோடு அகற்றப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளது மாத்திரமன்றி — அதை நடைமுறைப்படுத்துவது போல சாதி, மத, பிரதேச, ஊர் பிரிவினைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு முற்றிலும் கொள்கை அடிப்படையில் — இலட்சிய அடிப்படையில் வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணி!

கூட்டணிக்கு அளிக்கப்படுகின்ற ஒவ்வொரு வாக்கும் 'சுதந்திர, மத சார்பற்ற சமதர்மத் தமிழ்ஈழ அரசு நிறுவப்படவேண்டும்' என்ற புனிதமான இலட்சியத்துக்கு — தியாகி சிவகுமாரன் எந்த இலட்சியத்துக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்தானோ அந்த தெய்வீக இலட்சியத்துக்கு—அளிக்கப்படுகின்ற சம்மதச் சீட்டாகும்! தனி நபர்களைப் பாராது, கூட்டணியின் இலட்சியத்தை முன்வைத்து தமிழ் மக்கள் தங்கள் புனிதமான வாக்குரிமையை பயன்படுத்திட வேண்டிய நாள் யூலை 21ஆகும்! இதையே சிவகுமாரனின் ஆத்மா இன்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்!

எனவே நண்பா—தம்பி சிவகுமாரனின் பெயரால் இன்று ஆணையிட்டு உறுதியேற்போம்—

**தமிழ் இன ஒற்றுமையை கட்டிக்காப்போம்! சமதர்மத் தமிழ்ஈழ அரசை நிறுவிட உறுதியெடுப்போம்!**

**உன் அன்புத் தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சுயநலப் பேய்கள்

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பது புறநானூற்று வாக்கு. இந்த உண்மையை உணர மறந்து, கட்சிகட்டி தமக்குள் முட்டிமோதி நின்ற ஈழத்து தமிழ் பேசும் மக்கள் — தமிழர்களும் முஸ்லிம்களும் — இன்றைக்கு ஒன்று பட்டு ஒரே குடையின் கீழ் ஐக்கியப்பட்டு விட்டார்கள்! சாதி, மத, பிரதேச பேதங்களை மறந்து ஒரே அணியில் சங்கமமாகிவிட்டார்கள்!

தமிழர் விடுதலைக்கூட்டணியே தமிழ்தேசிய இனத்தின் ஏகபோக விடுதலை இயக்கம் என்பது இன்று உறுதியாகிவிட்டது. பிரிந்து பிளவுபட்டு நின்றதால் தமிழினம் தாழ்ந்தது—இணைந்து ஒன்றுபட்டு போராடினுலே எதிர்காலம் நமக்கு உண்டு என்பதை அனைவரும் உணர்ந்து உதயசூரியன் கொடியின் கீழ் ஒன்றுபட்டுவிட்டனர்.

தமிழரசுக்கட்சியும், தமிழ் காங்கிரசும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் இணைந்து உருவான தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக்கூட்டணியாக இலட்சிய அடிப்படையில் வளர்ச்சிபெற்று—முஸ்லிம் ஐக்கிய முன்னணியையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு, தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலை இயக்கமாக இன்று உயர்ந்தோங்கி நிற்கிறது.

தனித்தமிழ் ஈழம் என்ற கூட்டணியின் சுதந்திர கீதம் இன்று தமிழ் பேசும் மக்களின் தேசிய இலட்சியமாக உருவெடுத்துவிட்டது!

**இந்த மகோன்னதமான இலட்சியக் கோட்டையை—ஒற்றுமைக் கோட்டையை—விடுதலை மாளிகையை—உடைத்துக்காட்டுகிறோம் என்று தேர்தல் சமயத்தில் புறப்பட்டிருக்கிறன தமிழ் ஈழத்தில் தேர்தலுக்கு தேர்தல் மட்டுமே தலை காட்டுகின்ற சில சுயநலப்பேய்கள்!**

எட்டாத பழம் புளிக்கும் — என்று திராட்சைப் பழத்துக்கு எட்டிஎட்டிப் பார்த்து ஏமாந்த நரி கூறியதுபோல — கூட்டணியிடம் நியமனம் கோரி அது கிடைக்காததால் ஏமாந்த பச்சைச் சுயநலப் பித்தர்கள் இன்று புதியபுதிய வேஷங்களில்— புதியபுதிய சுலோகங்களுடன் — தமிழர் விடுதலைக் கூட்டணிச்கு எதிராக அணி சேர்கிறுர்கள்!

கடந்த ஐந்து ஆண்டுகளாக அமரர் ஜீ.ஜீ.யின் ஆசியுடன் கூட்டணியுடன் இணைந்து தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகள் செயற்பட்டு வந்தபோது — எங்கேயிருக்கிறுர்கள் என்பதே தெரியாமல் தங்கள் வயிற்றுப்பாட்டை பார்த்துக்கிடந்த இந்த சுயநல நரிகள்—தமிழ் சமுதாயம் கடந்த ஐந்து ஆண்டுகளாக கண்ணீரையும் செந்நீரையும் சிந்தி, வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்த வேளைகளில் எல்லாம் இருந்த இடமே தெரியாமல் சுருண்டு கிடந்தவர்கள்—இன்று தமிழ் காங்கிரசின் 'உண்மைத் தலைவர்கள்' நாமே என்று கூறிக்கொண்டு கூட்டணிக்கு எதிராக நஞ்சு கக்குகிறுர்கள்; தேர்தலில் போட்டியிட கொடுக்கு இழுத்து கட்டுகிறுர்கள்!

**தமிழின ஒற்றுமைக்கு ஊறு தேடமுனைகின்ற இந்தக் குடிகேடர்கள் மீது தமிழ் காங்கிரஸ் தலைமைப்பீடம் உறைப்பான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறுர்கள்!**

இச்சமயத்தில் தமிழ் இளைஞர்பேரவை சென்ற வாரம் எடுத்துள்ள முடிவையும் இங்கு குறிப்பிடவிரும்புகிறோம். கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகள், கட்சி அடிப்படையில் தமது வாலிப முன்னணிகள் இயங்குவதை முற்றுக தடைசெய்யவேண்டுமென்றும், தமிழ் இளைஞர் பேரவையொன்றே கூட்டணியின் ஒரேயொரு இளைஞர் இயக்கமாக அங்கீகரிக்கப்படவேண்டுமென்றும் தமிழ்இளைஞர்பேரவை கோரியிருக்கிறது. தமிழ் இளைஞர் பேரவையின் இக்கோரிக்கை — இத்தீர்மானம் — முற்றிலும் நியாயமானது என்பதை இன ஒற்றுமையை உளமாரவிரும்பும் அனைவரும் ஏற்றுக்கொள்ளுவார்கள்!

யார் எந்தக் கூத்தை ஆடினுலும் — யார் எந்த வேடம் இட்டாலும் — தமிழ் மக்கள் இன்று மிகவும் தெளிவாக இருக்கிறுர்கள்; கூட்டணியொன்றே தமிழினத்தின் தேசிய விடுதலை இயக்கம் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறுர்கள்; கூட்டணி ஏற்படுத்தியுள்ள இந்த தமிழ் தேசிய ஒற்றுமையை உடைத்தெறிய எவர் முயன்றுலும், அவரது பெயர் தமிழ்ஈழத்தின் அரசியலிலிருந்து முற்றுக இத்தேர்தலின்போது அழிக்கப்பட்டுவிடுமென்பது நூற்றுக்கு நூறு உறுதி!

# கூட்டணியின் வெற்றிக்காக தமிழிளைஞர்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழையுங்கள்!

## லண்டன் 'ஈழவிடுதலை' பிரமுகர் வேண்டுகோள்!

இம்முறை தமிழ் ஈழத்தில் நடைபெறும் பொதுத் தேர்தல், அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழ் ஈழத்தில் நடைபெறும் கடைசித்தேர்தலாகவே நாம் கருதுகிறோம். இத்தேர்தலில் தனித் தமிழ் ஈழம் என்ற சுதந்திர இலட்சியத்தை முன்வைத்து போட்டியிடுகின்ற தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் நூற்றுக்கு நூறு வீதமாகவெற்றி பெறவேண்டும். தமிழினத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள ஒற்றுமை சிதறக்கூடாது. எனவே இங்குள்ள தமிழ் ஈழத்து இளைஞர்கள், கருத்து வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து முழு மூச்சுடன் கூட்டணியின் வெற்றிக்காக — சுதந்திரத் தமிழ் ஈழம் என்ற இலட்சியத்துக்காக — உழைத்திட வேண்டும். இதையே லண்டனிலியங்கும் ஈழவிடுதலை முன்னணி ஈழத்து தமிழ்இளைஞர்களிடம் கூறும்படி என் மூலமாக சொல்லியனுப்பியுள்ளது!

—இவ்வாறு லண்டனிலிருந்து இங்கு வந்துள்ள ஈழ விடுதலை முன்னணியின் பிரதிநிதி திரு. வீரசிங்கம் அவர்கள் தமிழ் இளைஞர்களுக்கு விடுத்துள்ளவேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

1-6-77 புதன்கிழமை மாலை ராமகிருஷ்ண (சிறிய) மண்டபத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு பதிலளித்துப் பேசியபோதே ஈழவிடுதலை முன்னணி சார்பில் திரு. வீரசிங்கம் இந்த வேண்டுகோளை விடுத்தார். இவ் வரவேற்பு விழாவுக்கு த. வி. கூ. கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் கோவை மகேசன், குணராசா, விஜயசிங்கம் ஆகியோர் உரையாற்றினுர்கள். செல்வி திலகவதி கணபதிப்பிள்ளை தமிழ் ஈழத் தேசிய கீதம் இசைத்தார்.

திரு. வீரசிங்கம் வரவேற்புக்கு பதிலளித்துப் பேசுகையில் தமிழ் ஈழத்தின் விடுதலைப்போராட்டத்தில் லண்டனில் இயங்கும் ஈழவிடுதலை முன்னணியின் பங்கு பற்றி விளக்கினுர். லண்டனில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தின் போது மைதானத்தின் குறுக்கே படுத்து ஆர்ப்பாட்டம் செய்த விடுதலை முன்னணி வீரர்கள் வெள்ளைக்கார பொலிசாரால் கொடூரமாகத்தாக்கப்பட்டதையும், அப்படி தாக்குதலுக்குள்ளானவர்களில் ஒருவரது இடுப்பு எலும்பு இன்றும் முறிந்திருப்பதையும் அவர் விபரித்தார்.

சர்வதேச ஆதரவைத் திரட்டுவதிலும், தமிழ் ஈழ விடுதலைப்போருக்கு வேண்டிய அணிகளை தயார் செய்வதிலும் ஈழவிடுதலைமுன்னணி தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

"காண்டீபனுக்கு இலண்டனிலுள்ள தமிழர் இயக்கங்கள் உதவிசெய்ததற்குக் காரணம் அவர் ஒரு தலைவரின் மகன் என்பதற்காக அல்ல; ஈழநாட்டு விடுதலையில் ஆர்வமுள்ள ஓர் இளைஞர்என்ற ஒரே காரணத்துக்காகவே செய்தோமேதவிர அமிர்தலிங்கத்தின் மகன் என்பதற்காக அல்ல; நாளை இப்படியான நெருக்கடியில் எந்த ஒரு தமிழ் இளைஞன் வந்தாலும் அவனுக்கும் அதே போன்ற உதவியை நிச்சயமாகச் செய்வோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவு ஆலயத்துக்கு அருகில் தந்தைசெல்வாவின் முழு உருவ வெண்கலச் சிலையொன்றை வைப்பதற்கு கூட்டணிசெயலதிபர் அமிர் அனுமதியளித்துள்ளதாகவும், இந்தவெண்கலச் சிலையை ஈழவிடுதலை முன்னணி, தமிழக முன்னுள் முதல்வர் கலைஞர் கருணுநிதியின் ஆலோசனையுடன் உருவாக்கிவருவதாகவும் அவர் மேலும் கூறினுர்.

தந்தை செல்வாவின் வெண்கலச்சிலை பற்றி தமிழக முன்னுள் முதல்வருடன் ஆலோசனை செய்வதற்காக திரு. வீரசிங்கம் தமிழ் நாடு செல்கிறுர். திரு. வீரசிங்கம் அவர்கள் தம்முடன் லண்டனில் அழகான முறையில் அச்சிடப்பட்ட தந்தை செல்வாவின் 2000 பெரிய படங்களையும் எடுத்துவந்துள்ளார்.

## திருகோணமலையில் செல்வா அஸ்தி!

மூதறிஞர் தந்தைசெல்வா அவர்களது இறுதிக்கிரியைகளுக்கு செல்லுகின்ற வாய்ப்பை இழந்தவர்கள், அவரது புனித சாம்பலுக்கு வீரவழிபாடு செய்வதற்காக அவரது புனித சாம்பல் 3-6-77 வெள்ளிக்கிழமை மாலை திருகோணமலைக்கு எடுத்து வரப்படுகிறது.

வெள்ளிப் பேழையில் வைத்து தந்தையின் புனித சாம்பலை அவருடைய மகன் சட்டத்தரணி திரு. எஸ். ஸி. சந்திரகாசனும், மூதறிஞரின் துணைவியாரும் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்து வருகிறுர்கள். சாம்பல் பேழையை திருகோணமலை கூட்டணி வேட்பாளர் சட்டத்தரணி இரா. சம்பந்தன், முன்னுள் மூதூர் பா.உ. திரு. அ. தங்கத்துரை, தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மகளிர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் வரவேற்பார்கள்.

திருகோணமலை நகர மண்டபத்தில் சனிக்கிழமை (4-6-77) முழுவதும் சாம்பல் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும். சனிக்கிழமை மாலை திருகோணமலை முற்றவெளியில் நடைபெறும் இரங்கற் கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம் உட்பட கூட்டணித் தலைவர்கள் உரையாற்றுவர்.

## தமிழ் இளைஞர்பேரவை தீர்மானங்கள்!

28-5-77ல் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் மாவை சேனுதிராசாவின் தலைமையில் கூடிய தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழு பின்வரும் தீர்மானங்களை எடுத்தது.

* தமிழ்ஈழ விடுதலையை இலட்சியமாகக் கொண்டு விடுதலைப் போராட்டத்தை நடத்தும் நடவடிக்கைகளில் ஒன்றுபட்டு இயங்க வேண்டிய வேளையில், தேர்தல் காலம் வந்ததும் வாலிப முன்னணிகளைத் தொடங்கி அதன்மூலம் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டிப்பது.

* தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒரே இளைஞர் அமைப்பாக, விடுதலை அணியாக தமிழ் இளைஞர் பேரவையை தமிழர் விடுதலைக் கூட்டணியும் குறிப்பாகத் தமிழ் இளைஞர்களும் அங்கீகரிக்க வேண்டும்.

* தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களது வெற்றிக்கு முழு மூச்சாக உழைப்பது, விசேடமாக உடுப்பிட்டித் தொகுதியில் தமிழ் இளைஞர் பேரவையினர் முகாமிட்டு அத்தொகுதி வேட்பாளரின் வெற்றிக்காகப் பாடுபட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுதந்திரத் தமிழ் ஈழத்திலேயே முஸ்லிம்களும் தலைநிமிர முடியும்!

## தமிழர் - இஸ்லாமியர் ஒற்றுமையை இனி யாராலும் பிரிக்க முடியாது!"

### யாழ் முற்றவெளியில் சம்சுதீன் சங்கநாதம்!

'இந்நாட்டில் வாழும் 10 இலட்சம் முஸ்லிம்களும் தமக்கென தனித்துவ பீடத்தை அரசியலில் இது வரை பெறவில்லை. இதனால் இன்று அரசியல் அனாதைகளாக — அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்நாட்டில் முஸ்லிம்கள் வியாபாரத்தை நோக்கமாக கொண்டே குடியேறினார்கள். பின்பு கமம் செய்வதில் ஈடுபட்டார்கள். 1948 ஆம் ஆண்டு எங்கள் வியாபாரம் பறிக்கப்பட்டது. இன்று எங்கள் நிலங்களும் பறிக்கப்படுகிறது. அம்பாறை மாவட்டத்தில் அநியாயமாகத் தனிப்பட்ட முஸ்லிம்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1948ம் ஆண்டில் 10,000 சிங்களவர் மட்டுமே கிழக்கில் இருந்தனர். ஆனால் இன்றோ ஒரு இலட்சத்து எண்பத்தையாயிரம் சிங்களவர்கள் அங்கு வாழ்கின்றார்கள். 10 வருடங்களில் இந்த மாதிரியாக சிங்களக் 'குடியேற்றம் நிகழுமானால் எமது பிரதேசம் முழுவதையும் இழப்போம். நிலம்தான் பறிபோகிறதென்றால் இன்று எம் தன்மானத்தையும் பறிக்கத் தொடங்கிவிட்டார்கள். 1970ம் ஆண்டிற்குப்பின் 55 இடங்களில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டன. எங்கள் பெண்களைக்கூட கற்பழித்து உள்ளார்கள். இறுதியாக உயிர்களையும் கொலைசெய்துள்ளார்கள். புத்தளம் பள்ளிவாசலில் 7 முஸ்லிம்கள் துடிதுடிக்க கொல்லப்பட்டநேரத்தில்—பலர் காயமடைந்த நேரத்தில் தேசிய பேரவையில் இருந்த 12முஸ்லிம் எம்.பி.க்களில் ஒருவர்கூட இந்த படுபாதகத்திற்காக வாதாடவில்லை—வாயே திறக்கவில்லை. காரணம் அவர்கள் சிங்களக்கட்சிகளில் அங்கம் வகித்தார்கள். அந்தச் சிங்களக்கட்சிகளின் எடுபிடிகளாக இருந்தார்கள். இந்த நேரத்தில் ஒரேயொருவர்தான் பாராளுமன்றத்தில் எழுந்து முஸ்லிம்களுக்காக குரல் எழுப்பினார்—வாதாடினார் அவர்தான் மறைந்த எங்கள் தந்தை செல்வா.

பாதிக்கப்பட்ட எங்கள் சமூகத்தில் இருந்த முழு — அரை அமைச்சர்கள்கூட தாங்கள் சார்ந்திருந்த சிங்களக் கட்சிகளுக்கஞ்சி வாய் மூடி இருந்த வேளையில் திரு. தர்மலிங்கம் அவர்கள்தான் எங்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசினார். இவைகள் எதைக் காட்டுகிறதென்றால் எங்களுக்கும் தமிழர்களுக்கும் இரத்த உறவு இருக்கிறதென்பதைத்தான். நாங்கள் வியாபாரத்திற்காக வருகையில் ஆண்கள்தான் வந்தோம். பெண்கள் வரவில்லை; எனவே நாம் பெண் கொண்டது தமிழினத்துடன்தான்! ஆகவேதான் எங்கள் இரு இனத்துக்கிடையிலும் ஒரே விதமான மொழியியல்—பண்பியல்—கலாச்சார நடத்தைகள் காணப்படுகின்றன.

இன்று பாதிக்கப்பட்ட இரு சமூகங்கள் ஒன்று சேர்வதில் என்ன தவறு இருக்கிறது. கொழும்பு 7ல் வாழும் முஸ்லிம்கள் தாங்கள் தூக்கியெறியப்பட்டு விடுவார்கள் என்ற பயத்தில் நாம் ஒன்றாகச் சேர்வதை குறைகூறுகிறார்கள் சிறுபான்மை இனங்கள் இரண்டினதும் பிரச்சினை ஒன்றுதான். எனவேதான் நாம் வாழவேண்டுமென்றாலும் தனிநாடுதான் வழி என்ற உண்மையை உணர்ந்து தமிழ் மக்களுடன் இணைந்துள்ளோம். கடந்த காலங்களில் தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்த முஸ்லிம்கள் வெற்றியீட்டியபின் கட்சி மாறினார்கள். இந்த சரித்திரத்தால் இன்று தமிழ் மக்கள் எம்மீதும் சந்தேகப்படுகிறார்கள். மங்கையர்க்கரசி அம்மையார் நேரடியாகவே இது பற்றிக் கேட்டார். எனவே ஒன்றுமட்டும் சொல்லவிரும்புகிறோம். அன்று தனிமனிதர்கள் வந்தார்கள் — சென்றார்கள். இன்று ஒரு இயக்கமாக உங்களுடன் சேர்ந்துள்ளோம். எனவே ஒரு காலகட்டத்தில் ஏதாவது காரணத்தின் நிமித்தம் நாம் பிரிந்து செல்ல வேண்டி நேர்ந்தால் எங்கள் நாடாளுமன்ற பதவிகளை ராஜினமாச் செய்து மீளவும் எமது கொள்கையின் பேரில் மக்கள் முன் தேர்தலுக்கு நிற்போம்.

இறுதியாக யாழ்ப்பாணத்தில் இருக்கும் முஸ்லிம் மக்களுக்கு ஒரு சிறப்பான வேண்டுகோள். நீங்கள் சட்டத்தரணி யோகேஸ்வரனை ஏகமனதாக ஆதரிக்கவேண்டும்.

—இவ்வாறு 28-5-77 சனிக்கிழமை மாலை யாழ் முற்றவெளியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய முஸ்லிம் ஐக்கிய முன்னணித் தலைவரும் த. வி. கூட்டணியின் கல்முனை வேட்பாளருமான சட்டத்தரணி சம்சுதீன் அவர்கள் குறிப்பிட்டார்.


இன்னும் சில பிரதிகளே உண்டு

பிரதிகளுக்கு முந்துங்கள்

மா. குலேந்திரனின்

'தந்தை செல்வா'

பிரதி 3/. V.P.P. உண்டு.

தங்கராசா அச்சகம்

39/3, மானிப்பாய் வீதி,

யாழ்நகர்.


## தொண்டமான் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது!

நுவரெலியாத் தொகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமான் அவர்களின் தேர்தல் கட்டுப்பணம் 30-5-77 திங்களன்று நுவரெலியா அரசாங்கச் செயலகத்தில் செலுத்தப்பட்டது. கட்டுப்பணம் செலுத்தியபின்னர், இ.தொ.கா. தொழிலுறவு அதிகாரி இரா. தங்கவேல் தலைமையில் தமிழ் இளைஞர் பேரவையினர், இ.தொ.கா. பிரமுகர்கள், ஊர்வலமாக வந்தபோது 'தொண்டமான் வாழ்க' என்று சிங்களவர்கள் உட்பட அனைவரும் முழக்கமெழுப்பினர். நுவரெலியா — மஸ்கெலியா — தொகுதியில் த. வி. கூ. தலைவர் திரு. எஸ். தொண்டமான் முதலாவது பிரதிநிதியாக தெரிவு செய்யப்படுவது நிச்சயமாகிவிட்டது.


சுடர்

CHUDAR

—வைகாசி இதழ்

இப்போது எங்கும் விற்பனையாகிறது!


## நியமனப்பத்தி...

—1-ம் பக்கத் தொடர்

மூன்று இடங்களில் மட்டுமே கட்சிக்கொடிகளையும் சின்னங்களையும், பயன்படுத்தலாம்.

பதிவு செய்யப்பட்ட கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்களில் ஒலிபெருக்கியை பயன்படுத்துவதற்கு நேரக் கட்டுப்பாடு எதுவும் கிடையாது. இதன்படி, திரு. எஸ். தொண்டமான், நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கு நேரக்கட்டுப்பாடு கிடையாது, வேண்டிய அளவு நேரம் பயன்படுத்தலாம்.

## இன்றுசிவகுமா,.

—1-ம் பக்கத் தொடர்

புப்பேச்சாளர்களாக மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணிவேட்பாளர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், 'சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், ஈழவேந்தன் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையைச் சேர்ந்த இரகுபதி பாலஸ்ரீதரன் ஆகியோர் கலந்துகொள்வர். மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, மகளிர் பேரவையைச் சேர்ந்த உள்ளூர் பிரமுகர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

தேனாடு மாமன்றத்தினரின் தியாகி சிவகுமாரன் நாடகம், விழாவின் சிறப்பம்சமாக இடம்பெறவிருக்கின்றது. இந்நாடகத்தினை மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த திரு. வ. ஆ. தங்கவேலா [illegible]

## எமது வெளியீடுகள்


| | |
|---|---|
| நெஞ்சம் நிறைந்த தம்பி —கோவை மகேசன் | 2-00 |
| தெருப்புலவர் சுவர்கவிதை —கவிஞர் காசி ஆனந்தன் | 1-00 |
| தமிழ் மண் காப்போம் தாயகம் மீட்போம் (மூன்றும் பதிப்பு) —ஈழவேந்தன் | 1-00 |
| இலங்கையில் தமிழர் உயர்கல்வி —பேராசிரியர் ஹிலறி குறூஸ் | 2-00 |
| இலங்கைத் தமிழர் இன்னல் தீருமா —டாக்டர் இரா. சனார்த்தனம் —ஆ. இராசரத்தினம் (எல்லாளன்) | 1-00 |
| அனைத்துலக நீதிச்சபை முன் இலங்கை தமிழர் பிரச்சினை —தமிழர் கூட்டணி அறிக்கை | 2-00 |
| தடுப்புக்காவலில் பத்து நாட்கள் —கா. பொ. இரத்தினம் பா. உ. | 1-00 |
| தமிழன் சிந்திய இரத்தினம் 1958ல் நடந்தஇனக்கலவரம்பற்றியது —நாவண்ணன் | 1-50 |
| துரோகிகளே தூரவிலகுங்கள் —கோவை மகேசன் | 2-50 |

சுதந்திரன் வெளியீட்டகம்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.


## ஈழவேந்தனின் ஆங்கில நூல்

மூதறிஞர் தந்தை செல்வா அவர்களைப்பற்றி The Revered S. J. V. Chelvanayakam — The man and his mission என்ற ஆங்கில நூலை த. வி. கூ. கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் வெளியிட்டுள்ளார். தனிப்பிரதி (தபால் செலவுடன் சேர்த்து) சதம் 60 வேண்டுவோர் ஈழவேந்தன், 150, சுபத்திரராம் வீதி நுகேகொடை எனும் முகவரிக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

## ஒரு முக்கிய அறிவித்தல்

திரு. கே. சண்முகராசா அல்லது கே.எஸ். இராஜா எனப்படுபவர், தான் சுதந்திரன் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு உங்களிடம் பணம் வசூல் செய்ய வருவாரேயானால் விற்பனையாளர்களோ, தனிப்பட்டவர்களோ அவரிடம் எமக்கு வருமதியான தொகை எதையும் கொடுக்கவேண்டாம் என்றும் அப்படிக் கொடுக்கப்படும் பணத்திற்கு சுதந்திரன் நிர்வாகம் பொறுப்பல்ல என்பதையும் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்,
நிர்வாகி
சுதந்திரன்


ஆரோக்கியமான வாழ்விற்கு

மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப் வாங்கி உபயோகியுங்கள். சிறிய அளவில் கைக்கடக்கமான 50 சதம் கட்டியும் விற்பனைக்கு வந்துள்ளது.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைபெற தமிழினத்துக்கு தகுதியுண்டானல் உடுப்பிட்டியில் கூட்டணி வெற்றிபெறவேண்டும்!

## இராசலிங்கத்தின் வெற்றியே கூட்டணி வெற்றியை முழுமைப்படுத்தும்!

### யாழ் முற்றவெளிக் கூட்டத்தில் சிவா, அமிர் முழக்கம்!

"தமிழர் விடுதலைக் கூட்டணி தனித் தமிழ் ஈழம் என்றகொள்கையை முன் வைத்து பொதுத்தேர்தலில் போட்டியிடுகிறது. நாம் அமைக்கவிருக்கும் சுதந்திரத் தமிழ் ஈழத்தில் சாதிப் பாகுபாடுகள், தீண்டாமை, மதவேறுபாடுகள் இருக்காது அது ஒரு சமதர்மநாடாக விளங்கும் என்று நமதுதேர்தல் விஞ்ஞாபனத்தில் எடுத்துக்கூறியிருக்கிறோம். அதை நடைமுறையில் எடுத்துக் காட்டும் நோக்குடன் உடுப்பிட்டித்தொகுதியில் ஒரு சிறுபான்மைத் தமிழ் சகோதரரான நண்பர் இராசலிங்கத்தை நமது கூட்டணி வேட்பாளராக நியமித்திருக்கிறோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் குறிக்கோள் முழுமையடையவேண்டுமாயின்—தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றி பூரணப்படுத்தப்படவேண்டுமாயின் — உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராசலிங்கத்தை தமிழ் மக்கள் வெற்றிபெறச் செய்யவேண்டும். நமது இனம் விடுதலைக்குத் தகுதிபெற்றுவிட்டது என்பதை நிரூபிப்பதற்கு உடுப்பிட்டித்தொகுதியில் இராசலிங்கத்தின் வெற்றிக்காக ஒவ்வொரு தமிழனும் பேதமின்றி உழைக்கவேண்டும்!"

—மேற்கண்டவாறு முன்னாள் உடுப்பிட்டி பா.உ.வும் நல்லூர் தொகுதி கூட்டணி வேட்பாளரும், த. வி. கூ. செயலதிபர்களில் ஒருவருமான திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் யாழ் முற்றவெளியில், முன்னாள் நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டணி வேட்பாளர் அறிமுக விழாவில் பேசுகையில் கூறினார். கூட்டம் 28-5-77 சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

**செல்வா மீது சத்தியம்**

'உடுப்பிட்டித் தொகுதி மக்கள் 10 ஆண்டுகளாக என் மீது காட்டிவரும் அன்பினால் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்— திரு. இராசலிங்கத்தின் வெற்றிக்காக உழையுங்கள்! மற்றும் தொகுதிகளிலிருந்தும் ஆண்கள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் சென்று வீடு வீடாகப் பிரசாரம் செய்து திரு. இராசலிங்கத்தை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்றும் திரு. சிவசிதம்பரம் அங்கு வேண்டுகோள் விடுத்தார்.

இக் கூட்டம், ஆரம்பமாவதற்கு முன்னர், கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் சமாதிக்கு சென்று தமிழ் ஈழத்தின் விடுதலைக்கும், தமிழினத்தின் ஒற்றுமைக்கும் கூட்டணியின் கட்டுப்பாட்டின் வழி நின்று, தந்தை செல்வா காட்டிய பாதையில் அயராதுழைப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்தனர்.

**சிவா முன் வைத்த மூன்று கருத்துக்கள்**

நல்லைநகர் நாவலர் அவதரித்த நல்லூரில் தமிழர் கூட்டணி வேட்பாளராக நிற்கும் திரு. மு. சிவசிதம்பரம் முற்றவெளியில் திரண்டிருந்த வெள்ளம்போல் தமிழர் கூட்டத்தினரைப் பார்த்து ஆணித்தரமான சில கருத்துக்களை வழங்கினார். தமிழர் கூட்டணியின் மூன்று சிறப்புக்களை எடுத்துக்காட்டி மக்களைச் சிந்திக்கவைத்தார் சிவா.

தமிழரசுக் கட்சியும்தமிழ் காங்கிரசும் வேட்பாளர் நியமனத்தில் ஒன்றை ஒன்று மோதிக்கொள்வதாகப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன. தமிழ் காங்கிரஸ்காரர்களுக்குத் தமிழரசுக் கட்சிக்காரர் காலைவாரி விட்டுவிட்டார்கள் என்றும் பிரசாரம் செய்கிறார்கள். இவர்களுக்கு இந்த இடத்தில்வைத்துப் பதில்சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழர் கூட்டணியின் முதற் சிறப்பு கடந்த தேர்தலில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றிபெற்றமூன்றுதொகுதிகளைத் தமிழ் காங்கிரசுக்கு வழங்கியதுடன் மேலதிகமாக இன்னொரு தொகுதியையும் தமிழ் காங்கிரசுக்கு வழங்கியுள்ளதாகும். கடந்த தேர்தலில் வெற்றிபெற்ற தொகுதிகளைவிட மேலும் ஒரு தொகுதியை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு தமிழர் கூட்டணி வழங்கியதிலிருந்து நாம் தமிழர் கூட்டணிக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

அடுத்த சிறப்பு தமிழுரிமைப்போரில் தொண்டர்களாக இருப்போர் தாம் பிறந்து வளர்ந்த தொகுதிகளில்தான் தேர்தலுக்கு நிற்கவேண்டியநிலையை மாற்றியது. இதன் காரணமாக உடுப்பிட்டியில் தேர்தலுக்கு நிற்கவேண்டிய நான் நல்லூரிலும், வட்டுக்கோட்டையில் நிற்கவேண்டிய அமிர்தலிங்கம் காங்கேசன் துறையிலும் நிறுத்தப்பட்டிருக்கிறோம்.

மூன்றுவது சிறப்பு கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு வெற்றியீட்டிக் கொடுத்த உடுப்பிட்டித் தொகுதி அதன் முன்னாள் எம். பி. ஜெயக்கொடியினதும் எனதும் பூரணவிருப்பத்தின் பேரில்,ஆதரவின்பேரில் சிறுபான்மைத் தமிழர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.நாம் அனைவரும்வெற்றியீட்டி உடுப்பிட்டித்தொகுதி கூட்டணி வேட்பாளர் வெற்றிபெறவில்லையானால் தமிழினம் விடுதலைபெறத் தகுதிபெற்றது என சிங்கள தலைவர்களும் உலக நாடுகளும் எண்ணமுடியும்; இதற்கு இடம் வையாது உடுப்பிட்டித்தொகுதி மக்கள் மிகப்பெரும்பான்மை வாக்குகளினால் திரு. இராசலிங்கத்தை வெற்றிபெறச் செய்யவேண்டும்.

**குமாருக்கு வேண்டுகோள்**

இதே மேடையில் வைத்து குமார்பொன்னம்பலத்திற்கு உருக்கமான வேண்டுகோள் ஒன்றையும் சிவா விடுத்தார். 1947ம் ஆண்டு ஒன்றுபட்டிருந்த நாம் சிலகாலம் பிரிந்திருந்து 1974ல் மீண்டும் ஒற்றுமைப்பட்டு தமிழர் கூட்டணியை ஆரம்பித்தோம். எமது தலைவர் ஜீ. ஜீ. மலேசியா செல்லுமுன் தமிழர் ஒற்றுமையைப் பத்திரிகை நிருபர் ஒருவரிடம் வற்புறுத்திச்சென்றார். குமார் பொன்னம்பலத்திற்கு நியமனம் கொடுப்பதற்கு நாம் மனப்பூர்வமாக விரும்பினோம்; ஆயினும் கடைசி நேரத்தில் அது கைகூடவில்லை.

இன்று குமார் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடப் போவதாக அறிகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழர் ஒற்றுமையைக் குலைக்க, கலைக்க முன்வர வேண்டாமென்று அவரை அன்பாக வேண்டிக்கொள்ளுகின்றேன் குமார் யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு. யோகேஸ்வரனின் வெற்றிக்கும் ஏனைய தொகுதிகளில் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்கும் உழைக்க முன்வருமாறு பகிரங்க வேண்டுகோளொன்றை விடுக்கிறேன். அப்படி தமிழர் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்தால் வேட்பாளர்களும் கூட்டணியும் குமாருக்கு என்றும் நன்றி பாராட்டும். குமாருக்கு வயதிருக்கிறது, நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. எதிர்காலத்தில் நாம் அவருக்கு ஆதரவாக இருப்போம். எனவே தந்தையின் பெயரை மாசுபடுத்தாது யாழ் தொகுதியில் போட்டியிடாது ஒதுங்குமாறும் எமது அணியின் வெற்றிக்குப் பாடுபடுமாறும் குமாரை வேண்டுகிறேன்.'

**நாவலர் பேச்சு**

தமிழர் தன்மானத் தலைவன் தந்தை செல்வா மறைவின் பின் அவரது காங்கேசன்துறை வேட்பாளராக இருக்கும் நாவலர் அமிர் இரு கருத்துக்களை வற்புறுத்தினார்.

இத்தேர்தல் மிகமிக முக்கியமானதொன்ருகும். கிழக்குப் பாகிஸ்தானில் அவாமீ லீக், தலைவர் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் போட்டியிட்டு 96 சத விகித வாக்காளர்களின் ஆதரவைப் பெற்று, ஓராண்டு காலத்தில் வங்காள தேசத்தைப் பெற்றது. அதேபோல் இத்தேர்தலில் நாம் நிறுத்தியுள்ள 25 அபேட்சகர்களையும் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் இத்தேர்தலில் வெற்றிபெறச் செய்தால் மிக விரைவில் தமிழீழத்தை நாம் பெற்றுவிடுவோம். எனவே தமிழ் மக்கள் இத்தேர்தலில் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

குடியரசு அரசியல் சாசனத்திற்குக் கையெழுத்திட்ட வட்டுக்கோட்டை தியாகராசாவையும், நல்லூர் அருளம்பலத்தையும், யாழ்ப்பாணம் மார்டினையும், மட்டக்களப்பு ராஜனையும் கட்டுக்காசு எடுக்க முடியாதவாறு ஜுலை 21 தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குகளை தமிழர் கூட்டணி வேட்பாளர்களுக்கே அளிக்கவேண்டும்,

எமது இனம் விடுதலை பெறத் தகுதியுடையதா என்பதை நிர்ணயிக்கும் மிக முக்கிய சோதனை ஒன்று உடுப்பிட்டித் தொகுதியில் எம்மை எதிர்நோக்கியுள்ளது. சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியாக தமிழர் கூட்டணி சார்பில் திரு. த. இராசலிங்கம் அங்கும் போட்டியிடுகிறார்.அவர் வெற்றி பெறவில்லையானால் தமிழ் மக்கள் விடுதலை பெறத் தகுதியற்றவர்களென உலக அரங்கில் பேச்சு அடிபடும். எனவே உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் கூட்டணி அபேட்சகரை இத்தேர்தலில் வெற்றிபெறச் செய்வதன் மூலம் எமது விடுதலை உணர்வையும் தகுதியையும் சிங்கள இனத்துக்கும், உலகத் தலைவர்களுக்கும் உணர்த்துவோம் என்று கூறினார் அமிர்.

—தொகுத்தவர்: புத்தொளி



## பர்மா தமிழர் செல்வாவுக்கு அஞ்சலி

பர்மா, இரங்கூன் 1-5-77ம் நாளன்று (தொழிலாளர்கள் தினம்) மாலை 3 மணிக்கு 'இரங்கூன் மாரியம்மன் கல்யாண மண்டபத்தில்' பர்மா தமிழர்களின் சார்பில்,அகில பர்மா தமிழர் சங்கத்தலைவர் திரு. வி. சுப்பிரமணியனின் தலைமையில், பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களின் முன்னிலையில்; உலகத் தமிழர் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் (இலங்கையில்) இயற்கை எய்தியது குறித்து இரங்கற்கூட்டம் நடைபெற்றது. பல தமிழ் பிரமுகர்கள் இரங்கல் உரையும், இரங்கற் பாடலும்

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு கோடித் தமிழர்களுக்கென ஒரு நாடு காண உழைத்தவர் தந்தை செல்வா!

## 'லண்டன் ஈழ விடுதலை' தந்தைக்கு அஞ்சலி!

கடந்த 6-5-77ம் நாள் மாலை 7 மணியளவில் கிழக்கு இலண்டனில் உள்ள பிளாசிட்குரோ பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இலண்டன் வாழ் தமிழ் பெருமக்களின் சார்பில் 'ஈழ விடுதலை' உலகத் தமிழர்களின் தந்தை செல்வா அவர்களுக்கு இரங்கற் கூட்டம் நடத்தியது.

இலங்கை மாணவர் தலைவர் திரு. குமரேசன், கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தலைவர் அவர்கள் தனது உரையில் செல்வா அவர்களின் மறைவால் உலகத் தமிழர்கள் சொல்லொணுத் துயரத்தில் மூழ்கியிருக்கும் இவ்வேளையில் தமிழ் சமுதாயத்தின் முதுகெலும்பான மாணவமணிகள் தந்தையின் இலட்சியக் கனவான தமிழீழ விடுதலையை மனதில் இருத்தி எங்கள் உயிர்மூச்சு உள்ளவரை நாடு மீட்காமல் வீடு திரும்போம் என்ற உறுதியை மேற்கொண்டு செயல்பட்டால் மட்டுமே தந்தையின் ஆத்மா சாந்தி அடையும் எனக் கூறி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தும்படியாக கேட்டுக்கொண்டு தன் உரையை முடித்தார்.


அடுத்துப்பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான திரு. குமரகுரு அவர்கள் தந்தை செல்வா அவர்களுடன் தான் ஒன்றித்துப் பழகிய 15 ஆண்டுகால அனுபவத்தை எடுத்துக் கூறியதோடு தந்தை அவர்கள் குறித்த நேரத்தில் செயலாற்றிய ஆற்றலையும், தன்னலம் பேணுது பொதுநலம் கருதி அவர் செய்த சேவையையும் விளக்கினுர். உலகத் தமிழர்களுக்கான ஒரு தமிழ் நாட்டை அமைத்திட தந்தை அவர்கள் நாடாளுமன்றத்திலும் பல்வேறு கூட்டங்களிலும் தனது கருத்தை ஆணித்தரமாகக் கூறி தமிழர்களை தட்டி எழுப்பினுர் எனக்கூறி முடித்தார்.

அடுத்து திரு. தேவதாசு அவர்கள் தமிழ் மலர் உலர்ந்ததோ, தமிழ் மலை சாய்ந்ததோ — குகைவிட்டு கிளம்பிய சிங்கமே! சிங்களப்படைதனை சிதறடித்த செல்வமே! என்ற பாடலைப் பாடி தன் உரையைத் துவக்கினுர். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தந்தை ஆற்றிய சுதந்திரப் போராட்டப் பணியை தொடர்ந்து நடத்தும் பெரும் பொறுப்பு இளைய தலைமுறையினருக்கு ஏற்பட்டுள்ளது எனவும் நம்மிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஈழத் தமிழ்நாடு காண விரைந்து செயல்படவேண்டும் எனவும்கேட்டுக் கொண்டார்.

அறிஞர் அண்ணு அவர்கள் கண்ட தமிழர்களின் படைக்கலமாகிய திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணுவுக்குப்பின் அவரின் அருமைத் தம்பிகளால் இன்று சின்னுபின்னமாக்கப்படும் இழிநிலை தந்தை செல்வா அவர்களின் மறைவுக்குப்பின் ஏற்பட்டுவிடாதபடி இளைஞர்கள் விழிப்பாகப் பணியாற்ற வேண்டும் என எச்சரித்து தனது உருக்கமான உரையை திரு. இலங்கை மன்னன் முடித்துக் கொண்டார்.

நாடற்றவர்களாக, நாதியற்றவர்களாக இவ்வுலகெல்லாம் பரந்துவாழும் ஆறு கோடித் தமிழர்களுக்கு ஒரு நாடுகான தந்தை செல்வா அவர்கள் கண்டகனவு நினைவாகும் வேளையில் நம்மை துயரத்தில் வீழ்த்திச்சென்று விட்டார்கள். அவர் தொட்ட பணியை விட்ட பணியை நாம் மேற்கொண்டு முடிக்கவேண்டும் என உறுதி கொள்வோமாக என தமது இரங்கலுரையில் திரு. வீரசிங்கம் குறிப்பிட்டார்.

அடுத்து உரைநிகழ்த்திய திரு. பத்மநாபன் (ஆக்சுபோர்டு) அவர்கள் இங்குள்ள சில ஆங்கில ஏடுகள் வேண்டுமென்றே தமிழினத்தையும், மொழியையும் இழிவு படுத்தும் வகையில் செய்திகள் வெளியிட்டு தமிழின எதிரிகளுக்கு வால்பிடிக்கிறது; உண்மைக்கு மாருக செய்தி வெளியிடும் அப்பத்திரிகையாளர்களுக்கு கடுமையான சவுக்கடி கொடுத்ததோடு, மறைந்த செல்வம் மனிதருள் மாணிக்கம், சிங்களவர்களுடன் ஒத்துப்போக முடியாது என்பதை அனுபவ ரீதியாக அறிந்த பின்பே பிரிவினை கோரிக்கையை முன்வைத்தார்கள். அவர் வழி நின்று தமிழீழத்தைப் பெறுவதே தன்மானமுள்ள தமிழர்களின் கடமையாகும் என்ருர்.



லண்டனில் ஈழவிடுதலை முன்னணி நடத்திய செல்வா இரங்கற் கூட்டத்தில் திரு. ஜெயசீலன், திரு: குமரேசன், திரு. வீரசிங்கம் ஆகியோர் பேசுவதை படத்தில் காணலாம்.

அடுத்து திரு. செயசீலன் அவர்கள் கண்ணீர் மல்க தனது உரையை தொடங்கிஞர்கள். தந்தை செல்வா அவர்களின் உறுதி குலையாக் கொள்கைப் பற்றையும், மத, இன வேறுபாடற்ற அவரின் உயர்ந்த உள்ளத்தையும் எடுத்துக்கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்கள்.

தந்தை செல்வா அவர்கட்கு தமிழீழத்தில் வெண்கலச்சிலை ஒன்று அமைக்க இலண்டன் வாழ் தமிழர்களும் — உலகமெல்லாம் வாழும் தமிழர்களும் வரையாது வாரிவழங்க வேண்டும் என கூட்டத்தினர் ஏகமனதாக தமிழ்ப் பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

# ஈழத் தமிழர்களின் விடுதலைக் குரலாம் 'சுதந்திரனை' நிறுவிய ஒப்பற்ற மேதை!

## பெரியவருக்கு லண்டன் முரசு அஞ்சலி!

ஈழத் தமிழர்களின் தனிப்பெருந்தலைவர், தந்தை செல்வநாயகம் அவர்கள் மறைந்த செய்தி தமிழுலகிற்கு ஒரு பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. தமிழ் மக்களின் அண்மைக்கால வரலாற்றில் அறிஞர் அண்ணுவும், தந்தை செல்வாவும் தமிழர்களுக்காக தமது முழுமையான ஆற்றல்களையும் வாழ்வையுமே அர்ப்பணித்து அமரராகிவிட்டனர். இன்று நம் ஈழத்துத் தந்தை, மாசில்லா ஈழத்தமிழர் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

முப்பது ஆண்டுகளாக ஈழத்தமிழர்களின் சுபீட்சத்திற்காக ஒளிவீசிக்கொண்டிருந்த நம் ஈழத்துத் தந்தை 1898ம் ஆண்டு மலேசியாவில் பிறந்தார். சிறுவயதிலேயே ஈழம் திரும்பிய அவர் தனது கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு சிறிதுகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்து, பின்னர் சட்ட அறிஞரானுர். 1947ம் ஆண்டில் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் சேர்ந்து தமிழ்க் காங்கிரஸ் கட்சியை நிறுவினுர். மலையகத் தமிழ் மக்களின் பிரஜா உரிமைப் பிரச்சினையை ஒட்டி ஏற்பட்ட கருத்துவேறுபாட்டில் திரு. செல்வா அவர்கள் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார். மலைநாட்டுத் தமிழர்கள் வெளியேற்றப்படுவதற்கான சட்டத்தை எதிர்த்துப் போராடினுர் அவர். முன்னுள் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா 24 மணி நேரத்தில் 'சிங்களம் மட்டும்' அரசமொழியாக்கப்படுமென 1956ல் தேர்தல் பிரச்சாரம்செய்தபோது, தமிழரசுக் கட்சிமூலம் ஈழத் தமிழர்களை ஒற்றுமையுடனும், எழுச்சியுடனும் இயங்கப் பண்ணி தமிழீழத்தில்பெரும்பான்மை வெற்றியை ஈட்டினுர் செல்வா அவர்கள். சிங்கள அரசின் கொடுமைகளை எதிர்த்து பலமுறை சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடத்தினுர் நம் ஈழத்துக் காந்தி.

1972ல் தமிழகத்தின் தலைநகர் சென்று, ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு தாய்த் தமிழகத் தலைவர்களின் ஆதரவைப்பெறுவதற்கு இயங்கினுர். அதே ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பு தமிழர்களை நசுக்கப்படுவதை எதிர்த்து, தனிநாட்டுக்கோரிக்கையை முன்வைத்து, தனது நாடாளுமன்ற பதவியை ராஜினாமா செய்தார் செல்வா அவர்கள். 'தமிழினம் சுயஉரிமையுடன் வாழ நினைக்கின்றதா' என்ற அடிப்படையில் காங்கேசன்துறையில் தேர்தலில் போட்டியிட்ட செல்வா அவர்கள்பெரும்பான்மையான வாக்குகளுடன்வெற்றியீட்டினுர். ஈழத்தமிழர்கள் சுய ஆட்சிபெற்று வாழ விரும்புகிருர்கள் என்பதையும் எடுத்துக்காட்டினுர் அவர்.

தந்தை செல்வா அவர்கள் நிறுவி, தொடர்ந்து நடத்தி வந்த "சுதந்திரன்" ஏடு தமிழர்களின் ஈடு இணையற்ற ஒரு விடுதலைக் குரலாக கடந்த 30 ஆண்டுகளாக இயங்கி வருவது அவர் புரிந்த அரும்பெரும் சேவைகளில் ஒன்று. அமைச்சர் பதவிகள் தேடிவந்தபோதும் அவர் அவற்றை ஏற்காமல், மாசு இல்லாமல் தமிழினத்தின் விடுதலைக்கான ஒரே எண்ணத்தில் தனது நுண்ணிய அறிவைப் பயன்படுத்தி இயங்கிவந்தார். நேர்மை, வாய்மை, அறவழி இவற்றை என்றுமே கடைப்பிடித்துவந்த செல்வா அவர்களுக்கு துணிச்சல், வீரம் ஆகியவை உடன்பிறந்த குணங்களாக இருந்தன. அன்றும், என்றும், [illegible] டனேயே வாழ்ந்து வந்தார். அடுத்தவரின்மனம்நோகாது பேசுவதில் உயர்ந்தவராக விளங்கினுர். தன்னுல் தமிழர் இயக்கத்திற்கு என்ன நன்மை என்று எண்ணியே இயங்கினுர். ஆனுல் தனது கருத்துக்களை இயக்கத்திற்குள் திணித்ததில்லை. அவர் தமிழ் மக்களை நேசித்தார்; அவர்களுக்காகவே வாழ்ந்தார். இன்று மக்கள் அவருக்காக கண்ணீர் வடித்தவண்ணம் இருக்கிருர்கள்.

தந்தை செல்வா மறைந்தாலும், அவரது சகாப்தம் முடியவில்லை, "சுதந்திரத் தமிழ் ஈழம்" அவர் நமக்கு விட்டுச்சென்ற இலட்சியம். அந்த இலட்சியத்தை அடைய ஈழத்தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் இளம் விடுதலைச் சிங்கங்கள், முதியவர்கள், அறிஞர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், திரைகடலோடித் திரவியம் தேடும் தமிழர்கள், எல்லோரும் ஒருமை நோக்குடன், ஒற்றுமை எண்ணத்துடன், 'தான்' எனும் ஆணவமகற்றி இயங்குவோமாக. இதுதான் நாம் நம் அமரர் செல்வாவிற்கு செலுத்தும் அஞ்சலியாக இருக்கட்டும்!

—லண்டன் முரசு (ஆசிரிய தலையங்கம்) மே-1977

---

**சுதந்திரன்**

(வாரம் இருமுறை)

**சந்தா விபரம்**

ஓராண்டு — ரூபா. 50.00
அரையாண்டு — „ 25.00

**சுடர்**

(கலை இலக்கிய திங்களிதழ்)
ஓராண்டு — ரூபா: 12.00

அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# கூட்டணிக்கு இடையூறு செய்வோர் யாராக இருந்தாலும் நான் எதிர்ப்பேன்!

## அடலேறு ஆலாலு அறிக்கை!

'தமிழரசுக்கட்சியின் ஆரம்பகாலத் தொண்டனாக இருந்து இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்களில் ஒருவனாகத் தொடர்ந்தும் தொண்டனாக கூட்டணியின் இலட்சியத்தை அடைவதற்காக உழைத்து வருகின்றேன். எந்தக்காரணத்தினாலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சிக்கோ, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கோ இடையூறு விளைவிப்பதற்கு யார் முன் வந்தாலும் அதை முழுமூச்சாக முதலில் எதிர்த்து நிற்பவன் நான் என்றே நான் கருதுகிறேன்.

முல்லைத்தீவுத் தொகுதியில் நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று ஒரு பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் எதுவித உண்மையுமில்லை;

எனக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்கவில்லையென்பதையிட்டு எனது நண்பர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியும், பரபரப்பும் ஏற்பட்டு அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து மறியல்செய்து வற்புறுத்திய போதும் நான் எந்தத் தொகுதியிலாவது சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்று கூறவில்லை.

நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன் என்றும் அதைத்தொடர்ந்து ஒழுங்கு நடவடிக்கை எடுத்து நான் நீக்கப்படுவேன் என்றும் வெளிவந்த செய்தி-என்மீது களங்கம் கற்பிக்கவும், ஆதரவாளர்கள் மத்தியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தவும் எனக்கு நியமனம் கிடைக்காததால் ஏற்பட்டுள்ள பரபரப்பு நிலைமையைத் திசை திருப்பவும் மெற்கொண்ட காலத்துக்கு முந்திய வேண்டாத செயல் எனக் கருதுகிறேன்.

இந்தமாதிரியான தவறான செய்திகள் பரப்பப்படுவதும் பத்திரிகையில் வெளிவருவதும் என்மீது காழ்ப்புணர்ச்சிகொண்டசிலராலே என்று நான் கருதுகிறேன். அத்தகையவர்கள், நான் இயக்கத்திலிருப்பது தங்களுக்குப்பெரும் இடையூறாக இருப்பதாகக் கருதித்தான் இப்படித் தவறான செய்திகளைப் பரப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றார்கள்.

பிரச்சினைதோன்றிய நாளிலிருந்து இன்றுவரை என்னையோ எனது நலனில் அக்கறை கொண்ட எவரையுமோஇயக்கத்தைச்சேர்ந்த பொறுப்பானவர் எவரும் இந்தப் பிரச்சினை பற்றி கலந்தாசிக்கவோ சமரச முயற்சி மேற்கொள்ளவோ முன்வரவில்லை.

எந்தச் சூழ் நிலையிலும் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழம் என்ற இலட்சியத்திலிருந்து இம்மியளவும் பிறழ மாட்டேன் என்பதை இந்த இயக்கத்தில் உண்மையாக ஈடுபட்டுள்ளவர்கள் மறுக்க மாட்டார்கள் என்பதுஎனது எண்ணம்."

இவ்வாறு அடலேறு ஆலாலசுந்தரம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பர்மா தமிழர் செல்...

—6-ம் பக்கத்தொடர்

பாடினர். கூட்டத்துவக்கத்தில் பதினைந்து நிமிடம் எழுந்து இறுதி அஞ்சலி செய்யப்பட்டது.

பர்மாவின் பிரபல பெரிய அமைப்புகளான; அறிஞரண்ணா கலைமன்றம். அகில பர்மா தமிழர் சங்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், பர்மா இந்தியன் காங்கிரஸ் உலக இந்து பேரவை, பர்மா தி. மு. கழகம் இன்னும் பல பொது அமைப்புகளும், சார்பு மன்றங்களும், கலந்து கொண்டன. கூட்டமுடிவில் கீழ்காணும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது!

"தனித்தமிழ் நாடு பிரிவினைக்கு உழைத்த தண்டமிழ்ச்சிங்கம்! அடிமைச் சங்கிலியை அறுத்தெறியவந்த அருந் தமிழன்!! உலகத் தமிழனின் உரிமைக்கு வாதாடிய உத்தமன்!!! திரு. சா. ஜே. வே. செல்வநாயகம். இலங்கை வாழ் தமிழர்கள் ஒரு பெரும் தமிழ் தந்தையை இழந்தது குறித்து பர்மா தமிழர்கள் சார்பில் எங்களது ஆழ்ந்த அனுதாபத்தையும், இறுதி அஞ்சலியையும் இதன் மூலம் இயம்புகின்றோம்.

—மா. மதியழகன்

(அனுதாபக் கூட்டச்செயலாளர்)
பர்மா. இரங்கூன்


செல்லமகால் 12-வது வாரம்

முத்துராமன், சுஜாதா, ஸ்ரீகாந்த், பத்மபிரியா, மனோரமா, ஜெயச்சந்திரன், எம். என். ராஜம்,

— நடித்த —

எஸ். எஸ். கே. பிலிம்ஸாரின்

வாழ்ந்து காட்டுகிறேன்

7-வது வெற்றி வாரம்

கெயிட்டி

சிவாஜி கணேசன், சௌகார் ஜானகி, வி. கே. ராமசாமி, உஷாநந்தினி, எம்.ஆர்.ஆர். வாசு

— நடித்த —

விஜயவேல் பிலிம்ஸாரின்

மனிதனும் தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மன் கலர்)

ரீகல் [மட்டுநகர்] 11-வது வாரம்

எம். ஜி. ஆர். ராதா சலுஜா -நடித்த

இதயக்கனி ஈஸ்ட்மன் கலர்

5வது வாரம்

கிங்ஸ்லி பிளாசா

ஏ. வி. எம். ராஜன், ஜெயா, சுகுமாரி, சுந்தரராஜன், தேங்காய் சீனிவாசன், நாகேஷ், பேபி சுமதி

நடித்த

தேவரின்

திருவருள்

(கலர்)

26-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் - விஜயா

(கடைசி வாரம்) (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, சந்திரகலா நடித்த

உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்)

ரஞ்சன், அஞ்சலிதேவி நடித்த

நீலமலைத் திருடன்

(புத்தம் புதிய கொப்பி)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு-12, பண்டாரநாயகா வீதி, 194ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் ஜூன் மாதம் 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org